அரசு மற்றும் அரசு சாரஅமைப்புகள் மூலம் கடலூர் மாவட்டத்தில் மட்டும் 14305 பேருக்கு மனநல ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. மேலும், அங்கன்வாடி பணியாளர்கள் மூலம் ஊரகப்புற பெண்களுக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது. NIMHANS, Medicines sans Frontiers, Schizophrenic Research Center, Institute of Mental Health ஆகியவை மூலமும் மனநல ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

## வாழ்வாதார உதவிகள்

பேரிடர் தாக்கத்தால் மக்கள் வாழ்வாதாரத்தையும் இழக்க நேரிடும். இது போன்ற சூழ்நிலையில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டம் மூலம் வேலைவாய்ப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2016-17ம் ஆண்டு ஏற்பட்ட வறட்சியை எதிர்கொள்ள ஏதுவாக மேற்படி திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 100 நாள் வேலைவாய்ப்பை 150 நாட்களுக்கு நீட்டித்து வழிவகை செய்யப்பட்டுள்ளது. பேரிடர் பாதிப்பு பகுதிகளில் வாழும் ஏழை மக்களுக்கு உதவ கடலோர பேரிடர் அபாயக் குறைப்பு திட்டம் மற்றும் சுனாமி மறுவாழ்வு திட்டங்கள் மூலம் சிறப்பு திட்டங்கள் செயலாக்கப்பட்டு வருகின்றன.

**அரசு அல்லாத அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து நிவாரண பணிகளில் ஈடுபடுதல்**

பேரிடரின் தாக்கம் அளவுக்கு அதிகமாக இருக்கும் போது அரசாங்கம் மட்டும் அல்லாது தேசிய, சர்வதேச, சில சமயங்களில் அயல் நாடுகளின் உதவியுடனும் நிவாரண பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பல்வேறு அமைப்புகளுடன் இணைந்து நிவாரணப் பொருட்கள் பாதிக்கப்பட்டவர்களை சென்றடைய அனைத்து வித வெளிப்படையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## அமைப்புசார் நடைமுறைகள்

மாநிலத்தில் ஏற்படும் பேரிடர்களை எதிர்கொள்ள, மீட்பு மற்றும் நிவாரண பணிகளை மேற்கொள்ள வருவாய் நிர்வாக ஆணையர் / மாநில நிவாரண ஆணையர் பொறுப்பு வகிக்கிறார். இவரே மாநிலத்தின் நிவாரண ஆணையர் ஆவார்.

மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர் பேரிடர் மேலாண்மை அலுவலர் ஆவார். சென்னை மாவட்டத்தை பொறுத்தவரை மாநகராட்சி ஆணையர் அப்பணியை கவனித்து வருகிறார். பேரிடர்களின் போது மாவட்ட ஆட்சியர்களுடன் பிறதுறை அலுவலர்கள், காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, நகராட்சி, ஊராட்சி அமைப்புகள், பொதுப்பணித்துறை, சுகாதாரத்துறை, நீர்வள ஆதாரத் துறை, ஆகியவை ஒருங்கிணைந்து மீட்பு மற்றும் நிவாரண பணிகளை மேற்கொள்ளும். சென்னை மாவட்டத்தை பொறுத்தவரை சென்னை மாநகராட்சி இப்பணிகளை மேற்கொள்ளும். மேலும் சமீபகாலமாக அரசு அல்லாத தன்னார்வல தொண்டு நிறுவனங்கள் மீட்பு மற்றும் நிவாரண பணிகளில் பெருமளவு அரசுக்கு துணை

## திட்டங்கள்

- » சுனாமி மறுவாழ்வு
- » பேரிடர் இடர் மதிப்பீடு
- » வண்டல் மண் தூர்வாருதல்
- » குடிமராமத்து திட்டம் (பொதுப் பணித் துறை)
- » கடலோர பேரிடர் அபாயக் குறைப்பு திட்டம்
- » நிவாரணம் மற்றும் மறுவாழ்வு